# 2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ஆம் தேதி (31.08.2020) திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. ஈரோடு மாநகராட்சிக்கு ஊராட்சிக் கோட்டையிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் தனிக்குடிநீர்த்திட்டப் பணிகளை செயல்படுத்தி வரும் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (RWS Division), ஈரோடு அவர்கள் கீழ்கண்ட பணிகளை இத்திட்டப்பணிகளின் கீழ் மேற்கொள்ளவேண்டியுள்ளது என தமது 31.08.2020–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள் பணிகள் விபரம் பின்வருமாறு

| Sl.No. | Description of Work | Estimate Cost (Rs. in lakhs) |
|---|---|---|
| 1 | Construction of Coffer Dam at HW and Bhavani PCB, Conveyance of earth in clear water main (Bhavani Municipality area) and to Service Reservoirs | 128.59 |
| 2 | Construction of Service Reservoir – Additional steel quantity sand filling. PCC. and shuttering as per approved design | 269.87 |
| 3 | Removing DMR & DMR by controlled blasting in Water treatment plant components, Clear water reservoir, Suriyampalayam Booster station, VOC park booster station, Minor sumps-3 Nos, Service Reservoirs, Clear water main, feeder mains and distribution system | 780.31 |
| 4 | Electrical and Mechanical works in HW, WTP and booster stations | 347.02 |
| 5 | Process equipments at Water treatment plant | 105.13 |
| 6 | Additional length of DI pipe involved in feeder main and distribution system. Inlet pipe connections to existing Service Reservoirs | 437.06 |
| 7 | MS pipe trenchless- Railway crossing works | 187.94 |
| 8 | Interconnection works with new distribution system with existing distribution systems | 403.47 |
| 9 | House service connections – Providing Ball valve. Using 25mm dia MDPE PN 16 pipe instead of PN 12 MDPE pipe, Additional length of pipes and specials in HSC | 1497.85 |
| 10 | House service connections – Additional length involved in 20mm MDPE pipe for providing houses service connection works | 62.83 |
| 11 | Distribution system – HDPE stub end | 28.18 |

| | | |
|---|---|---|
| | HDPE Tee and HDPE reducers | |
| 12 | CC Road- Addtional Quantity involved in WTP Road works at Varadhanallur | 77.63 |
| | **Total** | **4325.88** |

மேற்கண்ட பணிகள் அனைத்தும் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சேமிப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படுவதால், மேற்கண்ட பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (RWS Division) , ஈரோடு அவர்கள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/17285/03)

**162. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-2க்குட்பட்ட வார்டு 26-ல் நாச்சியப்பா வீதி, வார்டு 28 வ.உ.சி பூங்கா, வார்டு 17 சூளை அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. மேற்படி அம்மா உணவகங்களில் பாய்லர், சீலிங் பேன், எக்ஸாஸ்ட் பேன், எல்இடி விளக்குகள் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளால் உணவுகளை சரியான நேரத்தில் தயார் செய்ய இயலவில்லை. எனவே தேவையான பராமரிப்பு உடனடியாக பணிகளை செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி அத்தியாவசிய பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K.N. பிரசன்னா, ஒப்பந்ததாரர் , ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,88,642/-ஐ திரு. K.N. பிரசன்னா, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : -

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ1/2593/2020)

**163. பதிவு செய்யப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட சூரம்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்து செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட சூரம்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் 125 HP HSC Clear water Pump ல் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. எனவே 125 HP HSC Clear water Pump பழுதுகளை சரி செய்ய உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணியை குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசகிப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 94,679/-ஐ திரு. K.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ2/2475/2020)

**164.** பதிவு செய்யப்பட்டது.

4. ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2–க்குட்பட்ட வார்டுஎண்: 22 சம்பத் நகர் மற்றும் வார்டுஎண்:30 ராஜாஜிபுரம் ஆகிய பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவியுள்ளதால், மேற்கொண்டு தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு, அப்பகுதி பொதுமக்கள் எங்கும் வெளியில் செல்லாமல் தடுக்கும் வகையில் சம்பத் நகர் பகுதியில் உழவர் சந்தை ரோடு, கிளப் மெலாஞ் ரோடு மற்றும் உழவர் சந்தை 2-வது வீதி ஆகிய வீதிகளில் 5 இடங்களில் உள்ள வழித்தடங்கள் மற்றும் ராஜாஜிபுரத்தில் சகன் வீதி, வரகப்பாவீதி, ஜானகியம்மாள் லேஅவுட்,சுப்பையன் வீதி,மில் வீதி மற்றும் 80 அடி ரோடு ஆகிய பகுதிகளில் 9 இடங்களில் உள்ள வழித்தடங்கள் ஆகியவற்றை இரும்பு தடுப்புகள் கொண்டு அடைத்தல், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு தொற்று பரவுகிறதா என தொடர்ந்து பரிசோதனை செய்ய மருத்துவமுகாமும் ராஜாஜிபுரம் பகுதியில் இரண்டு இடங்களில் மருத்துவமுகாம் நடத்துதல் மற்றும் காவல் துறையினருக்கு தேவையான சாமியான பந்தல், மின்விளக்கு வசதி, மின்விசிறி மற்றும் மேசை நாற்காலிகள் ஆகிய வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.3,47,397/-ஐ திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(E1/1290/2020)

**165.** பதிவு செய்யப்பட்டது.

5. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 வார்டுஎண்:46,47,49 மற்றும் 52–க்குட்பட்ட பகுதிகளான சாஸ்திரி நகர்,பசுமை பாரதி நகர், புதுகள்ளி வலசு, விநாயகர் கோவில் வீதி மற்றும் இரயில்வே காலனி ஆகிய பகுதிகளில் கொரோனா தொற்று பொதுமக்களுக்கு பரவியுள்ளது. இதனால் இப்பகுதிகள் கட்டுபடுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும்,கொரோனா தொற்று மற்ற பகுதிகளுக்கு பரவாமல் தடுக்கும் வண்ணம் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் கட்டுபடுத்தப்பட்ட பகுதியிலிருந்து வெளியில் எங்கும் செல்லாமல் தடுக்கும் வகையில் இந்த பகுதிக்கு வரும் அனைத்து வழிதடங்களும் இரும்பு கம்பி தடுப்பு மூலம் அடைக்க வேண்டியுள்ளது . எனவே பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான

பட்டியல் தொகை ரூ.2,18,319/-ஐ திரு.என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(E1/2275/2020)

**166. பதிவு செய்யப்பட்டது.**

6. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–1 சூரியம்பாளையம் மண்டல அலுவலகத்தில் 58 டம்பர் பின்கள், வைராபாளையம் உரக்கிடங்கில் 50எண்ணிக்கை டம்பர் பின்கள் மற்றும் மண்டலம்–4க்குட்பட்ட வெண்டிபாளையம் குப்பைக்கிடங்கில் 190 டம்பர் பின்கள் உட்பட உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ள மொத்தம் 298 டம்பர் பின்களை கழிவு செய்ய வேண்டியுள்ளது. ஆகவே மேற்கண்ட இடங்களில் உள்ள ரூ.7,16,000/– மதிப்புள்ள 59,600 கிலோ தோராய எடை கொண்ட டம்பர்பின்களை பொது ஏலம் மூலம் கழிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி, ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழைய டம்பர்பின்களை உள்ளது உள்ளபடி பொது ஏலத்தில் விடுவதற்கு அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ2/3758/2020)

**167. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 1 வார்டு எண். 6 முதல் 10 வரை உள்ள குடிநீர் அல்லாத மற்ற பயன்பாட்டிற்கு அந்தப்பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் மின்மோட்டார்கள் அமைத்து குடிநீர் தொட்டிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கடந்த 8 ம் தேதி பலத்த காற்றுடன் மற்றும் இடி மின்னலுடன் மழை பொழிந்தது. அப்போது உயர் மின்அழுத்தம் காரணமாக மின்மோட்டார் இயக்க பொருத்தப்பட்டிருந்த சில மின் இணைப்புகளில் TP மற்றும் (MCCB) மினி சர்க்யூட் பிரேக்கர்கள் பழுது ஏற்பட்டது. இதனால் மின்மோட்டார்கள் இயக்க முடியவில்லை. மேலும், தற்போது கொரோனா வைரஸ் நோய் பரவியுள்ளதை தொடர்ந்து, பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின்படி குற்றவியல் சட்டம் 1973 பிரிவு 144 ன் கீழ் தடைஉத்தரவு அமலில் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் தண்ணீர் விநியோகம் அவசியம் என்பதால் மேற்படி, பழுதுகளை உடனடியாக நீக்கவும், மேலும் உயர் மின்அழுத்தம் காரணமாக மீண்டும் பழுது ஏற்படாவண்ணம் இருக்க (MCCB) (உயர் மின்அழுத்த தடுப்பு அமைப்பு) பொருத்த ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு இப்பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள 11.05.2020 ல் ஆணையர் அனுமதி பெறப்பட்டது. மேற்படி, பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,49,330/–ஐ திரு.V. தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(E1/0662/2020)

**168. பதிவு செய்யப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் மேற்கொள்ள கூடுதல் செலவினத்திற்கு CGF நிதியில் ரூ. 16.64 கோடி பெறப்பட்டு அதில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளுக்கு ரூ.6.86 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள தொகை ரூ.9.76 கோடியினை திருப்பி செலுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 3513/2020/இ1 நாள். 29.02.2020 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே CGF நிதியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ. 9.78 கோடியினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திருப்பி செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு CGF நிதியில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் போக மீதம் ரூ.9.78 கோடி நிதியினை திருப்பி செலுத்த வேண்டியதன் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை திருப்பி செலுத்த அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்மைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ2/1927/2006)

**169.** அ.கு.அனுமதிக்கப்பட்டது.

**9.** ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புக்காக வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர இணைப்பு கட்டணங்கள் குறித்த திருத்திய உப விதிகளுக்கு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 9342/2020/பாசாதி1 நாள். 18.07.2020-ல் ஈரோடு மாநகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்டம் தொடர்பாக, இணைப்புதார்களிடமிருந்து கீழ்கண்டவாறு உயர்வு செய்த பராமரிப்புக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றிக்கான பாதாள சாக்கடைத் திட்ட திருத்திய உபவிதிகளின் படி வசூலிக்க பின்வரும் நிபந்தனைகளுடன் பொது அங்கீகாரம் (General Approval) வழங்கப்பட்டுள்ளது.

திருத்தி அமைக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகளுக்கான கட்டண விபரம்:-

| கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை விபரம் | | | | பாதாள சாக்கடை இணைப்பிற்கான மாதாந்திர கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வீட்டிணைப்பு | | தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகம் | | வீட்டிணைப்பு | | தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகம் | |
| | நடப்பு விலை விகிதம் | திருத்தியமைக்கப் பட்ட விலை விகிதம் | நடப்பு விலை விகிதம் | திருத்தியமைக்கப்பட்ட விலை விகிதம் | நடப்பு விலை விகிதம் | திருத்திய மைக்கப்பட்ட விலை விகிதம் | நடப்பு விலை விகிதம் | திருத்திய மைக்கப் பட்ட விலை விகிதம் |

<u>நிபந்தனைகள்</u>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டிட பரப்பளவு 500 சதுரஅடிக்குட்பட்டது | 5000 | 7500 | 10000 | 15000 | 70 | 100 | 140 | 300 |
| கட்டிட பரப்பளவு 501 முதல் 1200 சதுரஅடி முடிய | 7000 | 10000 | 21000 | 20000 | 100 | 140 | 300 | 420 |
| கட்டிட பரப்பளவு 1201 முதல் 2400 சதுரஅடி முடிய | 9000 | 12500 | 27000 | 25000 | 150 | 180 | 450 | 540 |
| கட்டிட பரப்பளவு 2401 சதுரஅடிக்கு மேல் | 15000 | 15000* | 75000 | 30000* | 200 | 220* | 1000 | 660* |
| * This is the base rate for the plinth area of 2401 sq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. Shall be increased in proportion to the increase in plinth area. | | | | | | | | |

1. மாநகராட்சி ஆணையர் ஈரோடு அவர்கள் இப்பொருள் தொடர்பாக தற்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள உபவிதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பிரசுரம் செய்யப்பட வேண்டும்.
2. பிரசுரம் செய்யப்பட்ட மாவட்ட அரசிதழ்களின் நகல்கள் (மூன்று) இல்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. இது குறித்து பொதுமக்களுக்கு தகுந்த கால அவகாசம் கொடுத்து தகவல் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
4. பயனாளிகளிடமிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள முன் வைப்புத் தொகைகளை வசூல் செய்ய துறை நடவடிக்கை எடுக்கவும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.
5. இறுதி ஒப்புதலுக்கு மாமன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலுடன் அரசிதழில் வெளியிடப்பட்ட துணை விதிகளின் இரண்டு பிரதிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) அனுப்பி வைக்கவும்.
6. இறுதி அங்கீகாரம் பெற கருத்துரு அனுப்பும் பொழுது உயர்நீதிமன்ற ஆணை எண். 24403/2008, நாள். 20.11.2008 மற்றும் அரசாணை எண். 293, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 26.11.2010ல் அறிவுறுத்தப்பட்டுள்ள வழிமுறைகள் உள்ளடக்கி அனுப்புதல் வேண்டும்.
7. தேவையான மாமன்ற தீர்மானம் மற்றும் துணைவிதிகளின் நகல்கள் போன்றவற்றுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முறைப்படி விண்ணப்பித்து இறுதி அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
8. பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான உரிய அறிவுரைகளை பின்பற்றும்படியும், அனுமதியற்ற பாதாள சாக்கடை இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பான அரசாணையை பின்பற்றும் படியும் அறிவுறுத்தப்படுகிறது.
9. பொது அங்கீகாரம் பெற்ற பின் அதை மாமன்றத்தின் தீர்மானமாக நிறைவேற்றி நாளிதழில் பிரசுரம் ஆகும்முன் அத்தீர்மான நகலை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
10. ஈரோடு மாநகராட்சியின் மாமன்ற தீர்மானத்தின் படியும் பாதாள சாக்கடைத் திட்ட Approved DPRன் படியும் பாதாள சாக்கடைக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை ஒவ்வொரு 5 ஆண்டுக்கும் 10%க்கு குறையாமல் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட விபரப்படி திருத்தி அமைக்கப்பட்ட கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றுக்கான பாதாள சாக்கடை திட்ட திருத்திய உபவிதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து திருத்தி அமைக்கப்பட்ட கட்டண விபரங்களை நடைமுறைக்கு கொண்டுவர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. ஈரோடு மாநகராட்சி – பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ் இணைப்புகள் வழங்க திருத்திய உப விதிகளுக்கு ஒப்புதல் வழங்கிய நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், செயல்முறைகள் சென்னை–28 அவர்களின் ந.க.எண். 9342/2020/பாசாதி1 நாள். 18.07.2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. மேற்கண்ட விபரப்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்ட திருத்திய உபவிதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து நடைமுறைக்கு கொண்டு வர வேண்டியதன் அவசர அவசியத்தினை கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(இ4/2569/2011)

**170. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

**10.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 மற்றும் ந.க.எண்.5437/2020–10/J1, நாள்.09.04.2020 ஆம் தேதிய அறிவுரைகள் மற்றும் இம்மாநகராட்சிக்கு துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோரின் 26.06.2020ஆம் தேதிய அறிக்கையில், ஈரோடு மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக பொதுமக்கள் மற்றும் பணியில் ஈடுபடும் தூய்மை பணியாளர்கள் அனைவரும் முககவசம் (MASK) பயன்படுத்தி தூய்மை பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ் முககவசம் (MASK) கொள்முதல் செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல்ஸின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.4,77,750/–ஐ வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/3222–2/2020)

**171. பதிவு செய்யப்பட்டது.**

**11.** அரசாணை (நிலை) எண்.390 நிதி (ஊதியப்பிரிவு) துறை நாள்.07.11.2012ல் 25 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்த அரசு பணியாளர்களுக்கு தலா ரூ.2000/– ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

அரசு துணை செயலர் நிதி (ஊதியப்பிரிவு) துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9562/ஊபி/2015–1 நாள்.03.03.2015 மற்றும் உதவி இயக்குநர் (துணிக்கை) உள்ளாட்சி நிதித்தணிக்கை குறளகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14892/ந.க.2/2015 நாள்.29.05.2015ல் மேற்படி அரசாணையினை மாநகராட்சிகளில் நடைமுறைப்படுத்த சம்மந்தப்பட்ட மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஈரோடு மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள்

மற்றும் பணியாளர்களில் 25 வருடம் மாசற்ற முறையில் பணிபுரிந்தவர்களுக்கு மேற்படி அரசாணையினை நடைமுறைப்படுத்தி ரொக்கப் பரிசு தலா ரூ.2000/– வீதம் மற்றும் சான்றிதழ் பணியாளர்களுக்கு வழங்கவும் மேற்படி செலவினத்தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றுத் தொகை வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

(சி1/3708/2020)

**172. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

**12.** பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் நடைபெறும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகளை இரண்டு செயற்பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் ஆகியோர் மேற்பார்வையிட, இரண்டு வாகனங்கள் வாடகை அடிப்படையில் இரண்டு வாகனங்கள் 01.04.2020 முதல் 30.09.2020 முடியவும், 01.10.2019 முதல் 31.09.2020 முடிய ஒரு வாகனத்தை அமர்த்திக் கொள்ளவும், பார்வை 1 மற்றும் 2ல் மாமன்றம் அனுமதி அளித்துள்ளது. பிரதி மாதம் அவ்வாறு அமர்த்தப்பட்ட வாகனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கும் போது சரக்கு மற்றும் சேவைவரி 2% சதவீதம் 01.09.2018 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது. ஆனால், அனுமதிக்கப்பட்ட தொகையில் சரக்கு மற்றும் சேவைவரி (GST 12%) சேர்க்கப்படவில்லை. அவ்வாறு சேர்க்கப்படாமல் பட்டியல் தொகையில் GST 12% பிடித்தம் செய்வதால், இழப்பு ஏற்படுகிறது என ஒப்பந்ததாரர் திரு. காதர் முகமது யூசுப், தனது 14.08.2020ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, மேற்கண்ட இச்செலவினத்திற்கென பார்வை 2ன்படி நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.5,47,647/- உடன் சரக்கு மற்றும் சேவைவரி (GST 12%) ரூ.65,717/- ஐ பட்டியல் தொகையில் சேர்த்து மொத்த செலவு ரூ.6,13,364/- ஆகும். எனவே மேற்படி செலவு தொகைக்கு (ரூ.6,13,364/-) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுதிக்கலாம்.

(இ1/21927/2006)

**173. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

**13.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. சாலை தினசரி அங்காடி கடை எண். 39–ன் குத்தகைதாரர் திரு. பி. ஸ்ரீதரன் என்பவர் மேற்படி குத்தகையினத்திற்கு அக்டோபர்–2018 முதல் குத்தகைத் தொகை ரூ.2,21,250–ஐ செலுத்தாததால் குத்தகையினம் பூட்டு சீல் வைக்கப்பட்டு, மேற்படியாரது உரிமம் 31.07.2020 உடன் ரத்து செய்யப்பட்டது.

எனவே ஆர்.கே.வி. சாலை தினசரி அங்காடி கடை எண். 39–ஐ பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000–க்கும் மாமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

அ) ஆர்.கே.வி. சாலை தினசரி அங்காடி கடை எண். 39–ஐ பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 50,000–க்கும் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**174. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

14. ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான ஈ.கே.எம். அப்துல்கனி சந்தை வளாகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரப்படி தற்காலிக கடைகள் குத்தகையினத்தின் மூலமாக ஒரே குத்தகையினமாக கருதி குத்தகை வசூலிக்கப்பட்டு வந்தது.

| | | |
|---|---|---|
| 1. | பழைய கட்டிட கடைகள் | 85 எண்ணிக்கை |
| 2. | திறந்த வெளிக் கடைகள் | 108 எண்ணிக்கை |
| 3. | தார்சு வராண்டா கடைகள் | 13 எண்ணிக்கை |
| | மொத்தம் | 206 கடைகள் |

மேற்படி கனிமார்க்கெட் வளாகத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் மூலமாக புதிய வணிக வளாகம் கட்டப்பட இருந்ததால், 31.03.2019 உடன் பழைய குத்தகையின கடைகளின் உரிமம் ரத்து செய்யப்பட்டு இடிப்பதற்கான நவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி வணிக வளாகத்தில் ஏற்கனவே தற்காலிக கடை வைத்திருந்தவர்களின் வேண்டுகோள்படியும், அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும் கீழேகுறிப்பிட்டுள்ள விவரப்படி தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண். | பிளாக் | மொத்தக் கடைகள் | கடையின் அளவு |
|---|---|---|---|
| 1. | Block – A | 10 Nos. | 10’ x 8’ |
| 2. | Block – B | 11 Nos. | 10’ x 10’ |
| 3. | Block – C | 12 Nos. | 10’ x 10’ |
| 4. | Block – D | 12 Nos. | 10’ x 10’ |
| 5. | Block – E | 12 Nos. | 10’ x 10’ |
| 6. | Block – F | 12 Nos. | 10’ x 10’ |
| 7. | Block – G | 13 Nos. | 10’ x 10’ |
| 8. | Block – H | 10 Nos. | 10’ x 10’ |
| 9. | Block – I | 10 Nos. | 10’ x 10’ |
| 10. | Block – J | 10 Nos. | 10’ x 10’ |
| 11. | Block – K | 10 Nos. | 10’ x 10’ |
| 12. | Block – L | 6 Nos. | 10’ x 10’ |
| 13. | Block – M | 8 Nos. | 10’ x 10’ |
| | **SUB TOTAL** | **136 Nos.** | |
| 14. | South Side Open stall | 76 Nos. | 6’ x 6’ |
| | **TOTAL** | **212 Nos.** | |

மேற்படி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ய 13.07.2020–ல் செயற் பொறியர், உதவி செயற் பொறியர், உதவி ஆணையர் (வருவாய்) மற்றும் உதவி வருவாய் அலுவலர்களைக் கொண்டு குழு அமைக்கப்பட்டது. மேற்படி குழுவினர் கனி மார்க்கெட் வணிக வளாகத்தின் அருகில் அமைக்கப்பட்டிருந்த தனியார் தற்காலிக கடைகளுக்கான சதுர அடிக்கான வாடகையை கேட்டறிந்து அதற்கு குறைந்தபட்சமாக சதுரடிக்கு ரூ.13– எனவும் அதிகபட்சமாக ரூ.24– உள்ளது என 29.07.2020–ல் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

மேலும் மேற்படி இடத்தில் ஏற்கனவே தற்காலிக கடை வைத்திருந்தவர்கள் புதிய தற்காலிக கடைகளுக்கு சதுரடிக்கு மாத வாடகையாக ரூ.20– என நிர்ணயம் செய்து வழங்கக் கேட்டு 17.08.2020–ல் கடிதம் சமர்ப்பித்திருந்தனர்.

மேற்படி வணிக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வதற்கான குழுவின் கூட்டம் 25.08.2020–ல் நடத்தப்பட்டது.

மேற்படி இடத்தில் ஏற்கனவே இருந்த தற்காலிக கடைகளுக்கு அதிகபட்ச சதுரடி வாடகையாக ரூ.25– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், தற்காலிக கடைகாரர்கள் சதுரடிக்கு மாதவாடகையாக ரூ.20– என நிர்ணயம் செய்ய கேட்டுக் கொண்டதன்படியும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யும் குழுவினர் ஒரு சதுரடிக்கு மாத வாடகையாகரூ.30– என நிர்ணயம் செய்யலாம் என அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

எனவே கனிமார்க்கெட்டில் அமைக்கப்பட்டுள்ள 136 தற்காலிக கடைகள் மற்றும் 76 திறந்த வெளிக் கடைகளுக்கு ஒரு சதுரடிக்கு மாத வாடகையாக ரூ.30– என நிர்ணயம் செய்யவும், அதனடிப்படையில் மேற்படி கடைகளை 01.09.2020 முதல் குத்தகையினத்தில் சேர்த்தும், தினசரி குத்தகையாக வசூல் செய்யவும், மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

அ) மேற்படி வணிக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 136 AC sheet தற்காலிக கடைகள் மற்றும் 76 திறந்தவெளிக் கடைகள் ஆகியவைகள் முற்றிலும் தற்காலிகமானது என்பதால் அதற்கு சதுரஅடி ஒன்றுக்கு மாத வாடகையாக ரூ.30– என நிர்ணயம் செய்யலாம்.

ஆ) மேற்படி தற்காலிக கடைகளுக்கு 01.09.2020 முதல் தினசரி குத்தகையினமாக குத்தகை வசூல் செய்யலாம்.

கோப்பு எண். 193/2020/அ1

175. அ.கு.அனுமதிக்கப்பட்டது.

15. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட நஞ்சை ஊத்துக்குளி சாலை வணிக வளாக கடை எண். 2–ஐ (056/4002) திரு. இ.கே. சின்னுசாமி என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். மேற்படி குத்தகைதாரர் 9 ஆண்டு கால குத்தகை உரிமம் முடிவுற்றதாலும், மேற்கொண்டு கடையை தொடர்ந்து நடத்த இயலாததால், இம்மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தனது 30.07.2020–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பேருந்து நிலைய வணிக வளாக மேற்கு புற முதல் தளக் கடை எண். 21–ஐ திரு. ஆர். செந்தில்குமார் என்பவருக்கு 01.01.2018 முதல் குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படியார் தனது 06.08.2020–ம் தேதிய விண்ணப்பத்தில் கோவிட்–19 ஊரடங்கு காரணமாக வியாபாரம் இல்லாததால் 05.08.2020 உடன் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தனது 06.08.2020–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பேருந்து நிலைய வணிக வளாக பி பிளாக் முதல் தளத்தை (கௌரிசங்கர் ஹோட்டல் மேல்தளம்) திரு. ஏ.பி. நல்லசிவம் என்பவருக்கு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டது. கொரோனா ஊரடங்கு சூழ்நிலையில் வியாபாரம் சரியில்லாத நிலையில் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாக தனது 20.08.2020–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி குத்தகையினங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குத்தகைதாரரது குத்தகை உரிமத்தை 31.08.2020 உடன் ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000–க்கும், மாமன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

அ) பேருந்து நிலைய வணிக வளாக மேற்குபுற முதல் தளக் கடை எண். 21, பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் பி பிளாக் (கௌரிசங்கர் ஹோட்டல் மேல்தளம்) மற்றும் நஞ்சை ஊத்துக்குளி சாலை வணிக வளாக கடை எண். 2 ஆகிய குத்தகையினங்களை குத்தகைதாரர் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்ததால் மேற்படியார்களது குத்தகை உரிமத்தை 01.09.2020 முதல் ரத்து செய்யலாம்.

ஆ) மேற்படி குத்தகையினங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000–க்கும் அனுமதி வழங்கலாம்.

இ) மேற்படி பணியினை ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/3640/2020

**176. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

16. இம்மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள வணிக வளாக குத்தகை இனங்களுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க 14.08.2020 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஏலக் கேள்வித் தொகை விவரம் | | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | பெயர் திரு./திருமதி. | கேள்வித் தொகை ரூ. | பெயர் திரு./திருமதி. | கேள்வித் தொகை ரூ. |
| 1. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தள மேற்கு புறக் கடை எண். 11 | **அ. ஆசிப்கான்**<br>சி.இ. ரஞ்சித்குமார் | **ரூ.15500-**<br>ரூ.15006- | சிராஜ்தீன் | 14010- |
| 2. | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தள மேற்கு புறக் கடை எண். 16 | சி.இ. ரஞ்சித்குமார் | ரூ.12000- | | |
| 3. | காமராஜ் ரோடு வணிக வளாக தரைத் தளக் கடை எண். 8 | ஆர். பூபதி | ரூ.6500- | | |
| 4. | <u>4–வது முறை ஏலம்</u> பேருந்து நிலைய புதிய வணிக வளாக கடை எண் 36 | பி. பழனிவேல்<br>எஸ். ரவி<br>**என். சீனிவாசன்** | ரூ.14500-<br>ஏலம் கோர வில்லை<br>**ரூ.14700-** | கே. குபேந்திரன் | ரூ.5000- |
| 5. | <u>4–வது முறை ஏலம்</u> பேருந்து நிலைய புதிய வணிக வளாக கடை எண் 37 | பி. பழனிவேல்<br>எஸ். ரவி<br>**என். சீனிவாசன்** | ரூ.14100-<br>ரூ.10500-<br>**ரூ.14300-** | கே. குபேந்திரன் | ரூ.5000- |
| 6. | <u>4–வது முறை ஏலம்</u> பேருந்து நிலைய புதிய வணிக வளாக கடை எண் 38 | எஸ். ரவி<br>**என். சீனிவாசன்** | ரூ.12000-<br>**ரூ.12200-** | | |
| **7.** | <u>9–வது முறை ஏலம்</u> | - | - | கே. ஜெயசுந்தரி | ரூ.6500- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பேருந்து நிலைய வணிக வளாக முதல் தள மேற்கு புறக் கடை எண். 8 | | | | |

வ.எண். 1 குறிப்பிட்டுள்ள ஏல இனத்திற்கு திரு. ஆசிப்கான் என்பவர் ரூ.15500-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி உச்ச ஏலக் கேள்வியானது மற்ற ஏலக்கேள்வியைக் காட்டிலும் அதிகமாகவும், மேற்படி குத்தகை இனத்திற்கான சென்ற மாத வாடகை ரூ.7211-யை விட அதிகமாகவும் உள்ளது.

வ.எண். 2, 3 மற்றும் 7-ல் உள்ள ஏல இனங்களுக்கு ஒருவர் மட்டுமே வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

வ.எண். 4-ல் உள்ள ஏல இனத்திற்கு திரு. என். சீனிவாசன் என்பவர் ரூ.14700-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி உச்ச ஏலக் கேள்வியானது மற்ற ஏலக்கேள்வி மற்றும் சென்ற மாத வாடகை ரூ.8700-ஐ விட அதிகமாகவும் உள்ளது.

வ.எண். 5-ல் உள்ள ஏல இனத்திற்கு திரு. என். சீனிவாசன் என்பவர் ரூ.14300-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி உச்ச ஏலக் கேள்வியானது மற்ற ஏலக்கேள்வியைக் காட்டிலும் அதிகமாகவும், மேற்படி குத்தகை இனத்திற்கான சென்ற மாத வாடகை ரூ.9200-ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

வ.எண். 6-ல் உள்ள ஏல இனத்திற்கு திரு. என். சீனிவாசன் என்பவர் ரூ.12200-க்கு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி உச்ச ஏலக் கேள்வியானது மற்ற ஏலக்கேள்வியைக் காட்டிலும் அதிகமாகவும், மேற்படி குத்தகை இனத்திற்கான சென்ற மாத வாடகை ரூ.9100-ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

அதன்படி வ.எண். 2, 3, 7 ஆகிய ஏல இனங்களுக்கு ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு ஏலக் கேள்வி கோரியுள்ளதால் மறு ஏலம் கோரவும், வ.எண். 1, 4, 5 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு வரப்பெற்ற உச்ச ஏலக் கேள்வித் தொகையினை ஏற்கவும், மேற்படியாருக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அ) மேற்குறிப்பிட்ட வ.எண். 2, 3, 7 ஆகிய ஏல இனங்களுக்கு ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு ஏலக் கேள்வி கோரியுள்ளதால் மறு ஏலம் கோர அனுமதி வழங்கலாம்.

ஆ) வ.எண். 1, 4, 5 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு வரப்பெற்ற உச்ச ஏலக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்டதொகுப்பு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்கவும் அனுமதி வழங்கலாம்.

இ) மேற்படி பணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**177. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

17. இம்மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள வணிக வளாக குத்தகை இனங்களுக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க 28.08.2020 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்:

| வ. எண். | ஏல இனம் | வரப்பெற்ற ஏலக் கேள்வித் தொகை விவரம் | | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | பெயர் | கேள்வித் | பெயர் | கேள்வித் |

| | | திரு./திருமதி. | தொகை ரூ. | திரு./திருமதி. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 2–வது முறை ஏலம் பேருந்து நிலைய வணிக வளாக முதல் தள மேற்கு புறக் கடை எண். 16 | சி.இ. ரஞ்சித்குமார் | ரூ.12500- | - | - |
| 2. | 2–வது முறை ஏலம் காமராஜ் ரோடு வணிக வளாக தரைத் தளக் கடை எண். 8 | ஆர். பூபதி | ரூ.7000- | | |
| 3. | 10–வது முறை ஏலம் பேருந்து நிலைய வணிக வளாக மேற்கு புற முதல் தளக் கடை எண் 8 | - | - | கே. ஜெயசுந்தரி | ரூ.7250- |
| 4. | 3–வது முறை ஏலம் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள A Block ஹால் | ஏ. செல்வராஜ்<br>கே. மாதேஸ்வரன் | ரூ.12500-<br>ரூ.12000- | - | - |
| 5. | 3–வது முறை ஏலம் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள B Block ஹால் | ஏ. செல்வராஜ்<br>கே. மாதேஸ்வரன் | ரூ.12500-<br>ரூ.11500- | - | - |
| 6. | 3–வது முறை ஏலம் பேருந்து நிலைய புதிய வணிக வளாக இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள C Block ஹால் | ஏ. செல்வராஜ்<br>கே. மாதேஸ்வரன் | ரூ.12500-<br>ரூ.12000- | - | - |

வ.எண். 1, 2 மற்றும் 3-ல் உள்ள ஏல இனங்களுக்கு ஏற்கனவே ஏல வைப்புத் தொகை செலுத்தியவர்கள் மட்டுமே கலந்து கொண்டு மேற்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வி கோரியுள்ளார்கள்.

வ.எண். 4-ல் உள்ள ஏல இனத்திற்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் திரு. ஏ. செல்வராஜ் என்பவர் ரூ.12500-க்கு ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி ஏலக் கேள்வியானது மற்ற ஏலக்கேள்வியைக் காட்டிலும் அதிகமாகவும், மேற்படி குத்தகை இனத்திற்கான கடந்த மாத வாடகை ரூ.12100-ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

வ.எண். 5-ல் உள்ள ஏல இனத்திற்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் திரு. ஏ. செல்வராஜ் என்பவர் ரூ.12500-க்கு ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி ஏலக் கேள்வியானது மற்ற ஏலக்கேள்வியைக் காட்டிலும் அதிகமாகவும், மேற்படி குத்தகை இனத்திற்கான கடந்த மாத வாடகை ரூ.12150-ஐ விட கூடுதலாகவும் உள்ளது.

வ.எண். 6-ல் உள்ள ஏல இனத்திற்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் திரு. ஏ. செல்வராஜ் என்பவர் ரூ.12500-க்கு ஏலக் கேள்வி கோரியுள்ளார். மேற்படி ஏலக் கேள்வியானது மற்ற ஏலக்கேள்வியைக் காட்டிலும் அதிகமாகவும், மேற்படி குத்தகை இனத்திற்கான கடந்த மாத வாடகை ரூ.12200-ஐ விட அதிகமாகவும் உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள வ.எண். 1, 2, 3 ஆகிய ஏல இனங்களுக்கு ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு ஏலக் கேள்வி கோரியுள்ளதால் மறு ஏலம் கோரவும், வ.எண். 4, 5 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு வரப்பெற்ற உச்ச ஏலக் கேள்வித் தொகையினை ஏற்கவும், மேற்படியாருக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு

உரிமம் வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அ) மேற்குறிப்பிட்ட வ.எண். 1, 2, 3 ஆகிய இனங்களுக்கு ஒருவர் மட்டுமே கலந்து கொண்டு ஏலக் கேள்வி கோரியுள்ளதால் மறு ஏலம் கோர அனுமதி வழங்கலாம்.

ஆ) வ.எண். 4, 5 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு வரப்பெற்ற உச்ச ஏலக் கேள்வித் தொகையினை ஏற்கவும், ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு கொண்டதொகுப்பு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்கவும் அனுமதி வழங்கலாம்.

இ) மேற்படி பணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**178. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

**18.** இம்மாநகராட்சி மண்டலம்–2–க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் மற்றும் வ.உ.சி. பூங்கா வளாகத்தின் பின்புறம் ஏ.பி.டி. ரோட்டில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 31.03.2020 உடன் முடிவடைந்தபடியால், 2020–2021–ம் ஆண்டிற்கு 01.04.2020 முதல் உரிமம் ஒப்படைக்க 27.02.2020, 18.03.2020, 27.03.2020 மற்றும் 14.07.2020 ஆகிய தேதிகளில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி நான்கு முறைகள் கோரப்பட்ட பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் ஏலம் கோரப்படவில்லை. இதனால் மேற்படி குத்தகையினங்களுக்கான ஏலம் விடும் பணிகளை முடிவு செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும் கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக 01.04.2020 முதல் துறை வசூல் மேற்கொள்ளவும் இயலாத சூழ்நிலை உள்ளது.

மேற்படி பகுதிகளில் பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளதால், கட்டணக் கழிப்பிடங்களை பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது.

மேலும் நேதாஜி தினசரி மார்க்கெட் கொரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கையின் காரணமாக வ.உ.சி. பூங்கா மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளில் செயல்பட்டு வருவதால், மார்க்கெட் வளாகத்தை சுகாதாரமாக பராமரிக்கவும், அதன் அருகில் உள்ள ஏ.பி.டி. சாலை கழிப்பிடத்தை அங்கு வரும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கட்டணமில்லாமல் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் மேற்படி எம்.ஜி.ஆர். நகர் மற்றும் ஏ.பி.டி. சாலை கழிப்பிடங்களை 2020–2021–ம் ஆண்டு (01.04.2020) முதல் ஏல இனத்திலிருந்து இரத்து செய்து பொது உபயோகத்திற்கு மாறுதல் செய்யும் பொருட்டு சுகாதாரப் பிரிவிற்கு ஒப்படைக்கவும், ஆணையாளர் மற்றும் மாமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

அ) மண்டலம்–2–க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் மற்றும் ஏ.பி.டி. சாலையில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2020–2021–ம் ஆண்டிற்கு நான்கு முறைகள் கோரப்பட்ட பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் யாரும் ஏலம் கோர முன்வராததாலும், ஏ.பி.டி. ரோடு கழிப்பிடத்திற்கு அருகில் வ.உ.சி. பூங்கா மைதானத்தில் தற்காலிகமாக மார்க்கெட் அமைக்கப்பட்டுள்ளதாலும், மேற்படி இரு கழிப்பிடங்களை ஏல இனத்திலிருந்து இரத்து செய்து பொது உபயோகத்திற்கு மாறுதல் செய்யும் பொருட்டு சுகாதாரப் பிரிவிற்கு ஒப்படைக்கவும் அனுமதி வழங்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி மாமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/193/2020

**179. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

19. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைக்க பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விண்ணப்பிக்கபட்டதில் புதிய 20 வாட்ஸ் LED தெருவிளக்கு அமைக்க புதிய மின்கம்பம் அமைத்தல், மின் கடத்திகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு கீழ்க்கண்ட விபரப்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்த கோரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.46-க்குட்பட்ட சிவம் நகர், முத்துசாமி காலனி, கலைமகள் கார்டன், நேதாஜி நகர் மற்றும் திருப்பதி கார்டன் பாண்டியன் நகர் பகுதிகளில் புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கடத்திகள் அமைத்து தெருமின்விளக்குகள் பொருத்துதல் | 19 எண்ணிக்கை | ரூ.1,10,716/- |
| 2. | வார்டு எண்.48-க்குட்பட்ட திருமுருகன் ஆண்டவர் வீதி, கருப்பணசாமி கோவில் வீதி, விவேகானந்தர் வீதி, மாயவர் பால்பண்ணை செல்லமுத்து தோட்டம், குமரன் நகர் ஆகிய பகுதிகளில் புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கடத்திகள் அமைத்து தெருமின்விளக்குகள் பொருத்துதல் | 7 எண்ணிக்கை | ரூ.1,38,722/- |
| 3 | வார்டு எண். 48-க்குட்பட்ட லட்சுமி நகர், சாஸ்திரி நகர், கல்யாண சுந்தரம் வீதியில் புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கடத்திகள் அமைத்து தெருமின்விளக்குகள் பொருத்துதல் | 3 எண்ணிக்கை | ரூ.57,326/- |
| | **மொத்தம்** | | **ரூ.3,06,764/-** |

எனவே மேற்கண்ட புதிய தெரு விளக்குகளை அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு **ரூ.3,06,764/-** தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

01. மன்றம் அனுமதி வழங்கலாம்.
02. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதிபெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தியமைக்கும் மற்றும் தெருவிளக்குகளை பொருத்தியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/2249/2012

**180. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**

20. ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு பிளீச்சிங் பவுடர் **10,000** கிலோ வாங்கி வழங்கும் பணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் **14.08.2020**ஆம் தேதியன்று வரப்பெற்றது.

| வ. | பொருளின் | *msÎ* | ஒப்பந்ததாரர்கள்/ நிறுவனங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|

| எண். | பெயர் | | | M/S. ஏ.ஏ.பி டிரேடிங் கம்பெனி | | M/S. போனிக்ஸ் குளோபல் வென்சர்ஸ் | | M/S. ஹை டெக் கீரின் இந்தியா | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 Kg | 10000 Kg | 1 Kg | 10000 Kg | 1 Kg | 10000 Kg | |
| 1. | பிளீச்சிங் பவுடர் | 1 Kg | 41.30 | 41.30 | 413000.00 | 46.02 | 460200.00 | 48.38 | 483800.00 | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கப்பட்டு அதில் குறைவாக மொத்த செலவினம் ரூ.4,13,000/= கொடுத்துள்ள M/S. ஏ.ஏ.பி டிரேடிங் கம்பெனி, அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடைதாக உள்ளதால், அதனை ஏற்று மாநகராட்சி சட்டம் பிரிவு **15**—ன் கீழ் இப்பணியை மேற்கொள்ளவும். மேற்படி செலவினத்தை கொரோனா வைரஸ் நிவாரண நிதியின் CSR நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிற

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/2000—1/2020)

**181. பதிவு செய்யப்பட்டது.**

**21.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்—**3**க்குட்பட்ட வார்டு எண். **31** எல்லப்பாளையம் கருவில்பாறை வலசு ஏரியினை புனரமைப்பு செய்து , படகு குழாம், நடைபாதை, பூங்கா மற்றும் சிறுவர்கள் விளையாடுமிடத்துடன் கூடிய பொழுதுபோக்கு இடமாக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் சார்பில் மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விட தயார் நிலையில் உள்ளது. தற்போது ஈரோடு மாநகராட்சியில் பூங்காவினை பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், பூங்காவினை பராமரிக்க அப்பகுதிவாழ் பொதுமக்களை கேட்டு கொண்டதற்கிணங்க சமூக ஆர்வலர் திரு. எஸ்.தேவராஜ், அவர்கள் மேற்படி பூங்காவினை நல்லமுறையில் பராமரித்து கொடுப்பதாக சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளார்.

எனவே, கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு ஆண்டு காலத்திற்கு பூங்காவை மட்டும் பராமரிப்பு செய்து கொடுக்க ஒப்படைக்கலாம்.

1. பூங்காவை பராமரிப்பு செய்ய தாங்களே ஆட்களை நியமித்துக் கொள்ள வேண்டும்
2. பூங்கா பராமரிப்பிற்கு வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது பிற்காலங்களில் இப்பூங்காவிற்கு சொந்தம் கொண்டாடி எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது.
3. பொதுமக்களிடமிருந்து எந்தவித புகார்களும் வரப் பெறாவண்ணம் பூங்கா பராமரிப்பு பணிகளை, மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4. பூங்காவில் உட்புறம் உள்ள கட்டிடங்கள், சிலைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் படகுகள் ஆகியவற்றிக்கு எவ்வித சேதம் ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டும்.
5. ஏரியின் உட்புறம் பொதுமக்கள் செல்லா வண்ணம் பார்த்து கொள்ள வேண்டும்.
6. எக்காரணத்தை கொண்டும் ஏரியில் படகு, பரிசல் மூலம் பொதுமக்கள் பயணிக்காமலும் மற்றும் மீன் பிடித்தல் போன்றவை நிகழாவண்ணம் பார்த்து கொள்ள வேண்டும்.
7. அத்துமீறி எவரேனும் பூங்கா மற்றும் ஏரியில் உட்புகுந்து அசெம்பாவிதம் நடைபெற்றால் காவல் துறையின் அனைத்து நடவடிக்கைக்கும் தாங்கள் பொறுப்பேற்க வேண்டும்.
8. மேற்படி பணி தொடர்பாக ஏதேனும் புகார்கள் வரப்பெற்றால் அதற்கு தாங்களே முழுப்பொறுப்பேற்க வேண்டும்.
9. மாநகராட்சிக்கு மேற்படி பூங்கா தேவைப்படும் பொழுது எவ்வித முன்னறிவிப்புமின்றி, திரும்ப பெற்றுக் கொள்ளப்படும்.
10. பூங்காவிற்கு நுழைவு கட்டணமாக பொதுமக்களிடம் கட்டணம் ஏதும் வசூல் செய்யக்கூடாது.
11. பூங்காவின் செடிகளுக்கான பராமரிப்பு , பூங்காவை சுத்தம் செய்தல் பணியை தாங்களே சொந்த பொறுப்பில் மேற்கொள்ளபட வேண்டும்
12. ஏரியின் உட்புறம் பொதுமக்கள் குப்பைகளை போடாமல் பார்த்து கொள்ள வேண்டும்.
13. பூங்காவில் எதிர்பாராவிதமாக சட்ட விரோத செயல்கள் ஏதும் ஏற்படின் தாங்களே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.
14. பூங்காவை காலை 6.00 முதல் 9.00 மணிவரை மற்றும் மாலை 4.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க வேண்டும்.
15. பூங்காவின் உட்புறம் மதம் சம்பந்தமான எந்த ஒரு நிகழ்வும் ஏற்படாவண்ணம் பார்த்து கொள்ள வேண்டும்.
16. பூங்காவில் உள்ள மின்விளக்கு, மின்மோட்டார் மற்ற இதர மின் வசதிகளுக்குண்டான மின்சார கட்டணம் மட்டும் மாநகராட்சியால் செலுத்தப்படும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு பூங்கா பராமரிப்பு பணியை மேற்கொள்ள திரு.எஸ்.தேவராஜ் , சமூக ஆர்வலர், ஈரோடு அவர்களுக்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். இ1/1652/2020

**182. அ.கு.அனுமதிக்கப்பட்டது.**